# தலைப்பு: நல்ல சமையல்




**வழங்கியோர்**

சமையல் என்பது ஒன்றுதான். ஆனால், நல்ல சமையல் என்றால் முறையான - நலங்குன்றா சமையல்; மற்றும் அதற்கும் மேலே!
சமை என்ற சொல்லே பலபொருள்கள் குறித்த ஒரு சொல்லாகும். அது ஆக்குதல், பக்குவப்படுத்தல், பொறுமை ஆகியவற்றைக் குறிக்கிறது. ஏனெனில் சமையல் ஓர் உணவுப்பண்டத்தை உருவாக்குவது என்பதைத் தாண்டி தானியங்கள், பச்சைக் காய்கறிகள் முதலியவற்றை நாம் உண்ணத்தக்கதாகவும் செரிக்கத்தக்கதாகவும் பக்குவப்படுத்துதல் ஆகும். அதற்கு பொறுமையை கடைப்பிடிப்பதும் அவசியம்.

நல்ல சமையலின் கூறுகளாவன:
1.. சமைப்பவரின் உடல்-உடைத் தூய்மை, 2. தரமான உட்பொருள்கள், 3. உட்பொருள்களை அளவில் மிகாது குறையாது அளவில் இடல், 4. உட்பொருள்களை உரிய விதத்தில் (வறுத்தல் பொடித்தல் எனத்) தயார்ப்படுத்தல், 5. தூய கலன்கள், 6. கலன்களின் இயல்புகள் (மட்பாண்டம், அடிகனமான பாத்திரம், செம்பு-பித்தளைக் கலன்கள் என), 7. தேவையான சுடர் தரும் அடுப்பு, 8. துரித சமையலை தவிர்த்து வேண்டிய கால அளவில் அடுப்பில் வைத்தல், 9. சுடரின் அளவை கூட்டுதல் குறைத்தல் மற்றும் 10. ஒவ்வொரு உட்பொருளை இடும் நேரங்களின் வித்தியாசத்தை பேணுதல்.

இப்படி ஆயத்தமான பின் சமையலில் நாம் காட்டும் முறைகள் ஆளுக்கு ஆள் மாறுபடுகின்றன. ஈடுபாட்டோடு சமைத்தல், அனுபவத்தால் தடுமாறாமல் சமைத்தல், முன் அனுபவம் இன்றி குறிப்புகளை மட்டும் வைத்து சமைத்தல் என்றவாறு அமைகின்றன.
நாம் வழக்கமாக உட்கொள்ளும் உணவுகள் நல்ல சமையல் மூலம் தயாரானதா என்பதை, பெரும்பாலும் உணவு பரிமாறப்படும் இடங்களைப் பொருத்து அறியலாம்.
குறிப்பாக உணவகம் போன்ற வெளியிடங்களில் சமையல் என்பது உணவுத் தயாரிப்பு என்ற நோக்கத்தை விட ஒரு சரக்கு தயாரிப்பு என்ற நிலையை அதிகம் கொண்டிருக்கும். விருந்துணவுக்கான சமையலில் அழைப்பாளர்களை களிப்பூட்டும் அம்சங்களே நிறைந்திருக்கும். அவ்விடத்து விருந்தோம்பல்கூட தற்காலிகமாக இருப்பதற்கே வாய்ப்பு அதிகம்.

ஆனால், தரமான உட்பொருள்கள் - முறையான தயாரிப்பு இவற்றால் மட்டும் ஒரு நல்ல சமையல் நிறைவடையாது. ஏனெனில். உள்ளார்ந்த விருந்தோம்பல் கொண்டதாகவும் அது இருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் சமைப்பவரிடத்தில் தாய்மையுணர்வு காணப்பட்டால் மட்டுமே அது முழுமை அடையும். சுவை மிளிர சமைத்தாலும் அதில் தாயன்பு இல்லாவிடில் அது எந்திரத்தனமாகவே இருக்கும். அது சமையலில் ஈடுபடும் எந்த பாலினர்க்கும் பொருந்தும். வீடு மட்டுமின்றி, உணவு வழங்கப்படும் எந்த இடத்திற்கும் பொருந்தும். “தாயோ(டு) அறுசுவை போம்” - எனும் ஔவையின் வாக்கே அதனை உணர்த்தும்.

----- அகமது கனி. பழனி – தமிழ்நாடு.

(சொற்கள்:242 சொற்றொடர்கள்:20 பத்திகள்:7)